**இலங்கை கலை மன்றம் - 2019**

-----------------------------------------------------

## 1.1 அபிப்பிராயம்

இலங்கை கலை மன்றத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

மன்றத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன்.
இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, மன்றத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிலையத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிலையம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

மன்றத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மன்றத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை

தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வு விடயப்பரப்பு

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக மன்றத்தின் கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக மன்றத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலம் பினிவருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது மன்றத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது மன்றத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிலையம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

### 1.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 1952 இன் 18 ஆம் இலக்க இலங்கை கலை மன்றச் சட்டம் | | | |
| (i) 13(1) உப பிரிவு | சபையின் நிரந்தர பதவியொன்றான செயலாளரை நியமிக்கும் அதிகாரி மனற்த்தின் நிறைவேற்று சபையாக இருந்த போதும் அப்பதவிக்கான நியமனம் உயர் கல்வி மற்றம் கலாசார அலுவல்கள் அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | இது தொடர்பாக சரிப்படுத்தல் தற்போது மேற்கொள்ளப்பட்டுள் ளது. | இலங்கை கலைகள் மன்றத்தின் சட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) 23 ஆம் பிரிவு | சபையினால் தயாரிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் அமைச்சரால் வர்த்தமானி ஊடாக பிரசித்தப் படுத்தப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக கணக்காளரின் ஆலோசணை பெற்றுக் கொள்ளப்பட்டதன் பின்னர் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை கலைகள் மன்றத்தின் சட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் II ஆம் பிரிவு | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 1,199,940 தொகை 03 நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்த போதும் உரிய அமைச்சரின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இலங்கை கலைகள் மன்றத்தின் நிறைவேற்ற அங்கீகாரத்திற்கு உட்பட்டு இந்நிலையான வைப்பு கணக்கு ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் எதிர்காலத்தில் நிலையான வைப்புக் கணக்கு ஆரம்பிக்கும் போது அமைச்சரின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) 2003 ஜூன் 02 திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | | | |
| (i) 4.2.6 ஆம் பந்தி | நிர்வாக சபையால் மாதாந்த மீளாய்விற்கு மேலதிகமாக காலாண்டு, அரையாண்டு மற்றும் வருடாந்த செயலாற்றல் அறிக்கை மதிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும் காலாண்டு செயலாற்றல் அறிக்கை காலாண்டு முடிவடைவதற்கு 30 நாட்களுக்கு முன்னர் வரிசை அமைச்சிற்கும் பொது முயற்சிகள் திணைக்களத்திற்கும் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதும் 2019 ஆம் ஆண்டிற்குரிய அறிக்கை அதன் பிரகாரம் அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை. | நிதி முன்னேற்றம் காலாண்டு ரீதியாக வரிசை அமைச்சிற்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் 2003 ஜூன் 02 திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் செயற்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) 5.2.1 ஆம் பந்தி | தயாரிக்கப்பட்டிருந்த வருடாந்த பாதீட்டு சுற்றறிக்கையின் 5.2.1 ஆம் பந்தியின் பிரகாரம் மூலதன மற்றும் மீண்டெழும் வருமானம் மற்றும் செலவினம் எதிர்வுகூறல்கள் உள்ளடக்கப்பட்டு தயாரிக்கப்பட்டு மன்றத்தின் ஆரம்பம் முதல் காணப்படும் வங்கி நடைமுறை கணக்கொன்று ஆரம்பிப்பதற்காக திறைசேரியிடம் கோரப்பட்டிருக்கவில்லை. | இலங்கை கலைகள் மன்றம் வருமானம் உழைக்காத நிறுவனமொன்றாக இருப்பதால் வருடாந்த பாதீடு தயாரிக்கும் போது கணக்காய்வு விசாரணையில் குறிப்பிடப்பட்டுள்ள மீண்டெழும் மற்றும் மூலதன வருமானத்தை எதிர்வுகூற இயலுமை காணப்படவில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (iii) | 6.5.1 ஆம் பந்தி | நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக் கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். எனினும், சபையினால் மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 4 மாதங்களின் பின்னர் அதாவது 2020 யூன் 25 திகதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. | கொவிட் 19 தொற்று காரணமாக நாடுபூராகவும் விதிக்கப்பட்டிருந்த ஊரடங்கு நிலைமை காரணமாக 2020.03.17 ஆந் திகதியில் நடைபெற இருந்த கூட்டம் இரத்துச் செய்யப்பட்டிருந்தது. மீண்டும் அலுவலக செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் 2020.06.16 அங்கீகாரம் பெறப்பட்டு தேவையான தகவல்களுடன் நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 4 ஆம் பிரிவு | மீளாய்வாண்டிற்காக பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்படவில்லை. | 2019 ஆம் ஆண்டில் நிறுவனத்திற்காக பொருட்கள் மற்றும் சேவைகள் கொள்வனவு செய்ய திட்டமிடப்படாதிருந்தமையால் பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்படவில்லை. நிகழ்ச்சிகளை நடாத்தும் போது சேவை கொள்வனவுகள் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பெறுகை சபையின் அங்கீகாரத்தின் கீழ் எமது நிகழ்ச்சித்திட்ட செலவினத் தலைப்பின் கீழ் மேற்கொள்ளப் பட்டது, | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 1.6 நிதிய முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| நிதி செயற்திறனாகவும் வினைத்திறனாகவும் முகாமைத்துவம் செய்யாமை காரணமாக சபையின் நடைமுறைக் கணக்கில் ரூபா 0.5 மில்லியனுக்கும் ரூபா 5.3 மில்லியன் அளவிலான வீச்சொன்று மீளாய்வாண்டு பூராகவும் விளைவற்ற வகையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | 2019 ஆம் ஆண்டில் செயற்படுத்தப்பட்ட சரசவி பிரதீபா நிகழ்ச்சித் திட்டத்திற்காக தேவையான மொத்த நிதி ஏற்பாட்டையும் வரிசை அமைச்சிடம் கோரிய போதும் அந்நிதிஏற்பாடு களிலிருந்து ஒரு பகுதியே கிடைத்திருந்தது. அந்த அளவு சரசவி பிரதீபா நிகழ்ச்சித்திட்டத்தினை நடாத்தி பூர்த்தி செய்வதற்கு போதியதாக இல்லாமையாலும் அப்போதைய இலங்கை கலை மன்றத்தின் தலைவர் உட்பட நிறைவேற்று சபை இராஜினாமா செய்த காரணத்தினாலும் திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்டிருந்த நிகழ்ச்சித்திட்டங்களை பூர்த்தி செய்வதற்கு முடியாமல் இருந்ததுடன் கிடைத்த நிதிஏற்பாட்டை திட்டமிட்ட செயற்பாடுகளுக்கு ஈடுபடுத்த முடியாமல் இருந்தது. | வரிசை அமைச்சிலிருந்தும் ஏனைய மூலங்களிலிருந்தும் சபைக்கு கிடைக்கும் பணத்தை செயற்திறனாகவும் வினைத்திறனாகவும் முகாமை செய்யப்பட வேண்டும். |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 1,921,714 ஆன மிகையொன்றாக இருந்ததுடன் அதனோடொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 3,282,782 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 1,361,068 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது செயலமர்வுகள், நிகழ்ச்சித்திட்ட செலவினங்கள் மற்றும் நிதி அனுசரணைகளுக்கான செலவினம் ரூபா 1,273,581 இனால் அதிகரித்திருந்தமை பிரதான காரணங்களாக இருந்தன.

### 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவினங்களின் போக்கு பகுப்பாய்வு

முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் சம்பளம், வேதனங்கள் மற்றும் ஊழியர் நலன்கள் செலவினம் 15 சதவீதத்தினால் அதிகரித்தமை, செயலமர்வுகள், நிகழ்ச்சித்திட்ட செலவினங்கள் மற்றும் அனுசரணைகளுக்கான செலவினம் 22 சதவீதத்தினால் அதிகரித்திருந்தமை காரணமாக முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் மிகை குறைவடைவதற்கு காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| பதவியணியினர் சேர்ப்பதற்காக 2011 ஆம் ஆண்டின் போது முகாமைத்துவச் சேவை திணைக்களத்தின் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர் பதவிக்காக நிரந்தர நியமனம் மீளாய்வாண்டு இறுதி வரை மேற் கொள்ளப்படாதிருந்ததுடன் முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவி யொன்றல்லாத கணக்கு எழுதுனர் பதவிக்காக ஒப்பந்த அடிப்படையில் உத்தியோகத்தர் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு 2019 சனவரி முதல் திசெம்பர் வரை ரூபா 360,000 ஆன படிகள் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. நிதிக்கூற்றுக்களை உறுதிப்படுத்துதல், கணக்கீட்டு நடவடிக்கைகளை பேணிச்செல்லல் மற்றும் கொடுப்பனவு செய்தல், முற்பணங்களை வழங்குதல், காசோலைகளில் கையொப்பமிடல் மற்றும் வங்கிக்க கணக்கிணக்கங்களை தயாரித்தல் போன்ற நடவடிக்கைகளை கண்காணிப்பதற்காக நிரந்தர அடிப்படையில் உத்தியோகத்த் ஒருவர் நியமிப்பதற்கு 2020 யூலை வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர் பதவிக்காக நிரந்தர நியமனம் செய்வதற்காக தேவையான நடவடிக்கைகள் எதிர்வரும் காலங்களில் ஒப்பந்த அடிப்படையில் கணக்கு எழுதுனர் பதவிக்காக ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்த உத்தியோகத்தரின் சேவை நிறைவேற்று சபையின் அங்கீகாரத்தின் பேரில் தொடர்ந்தும் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | மன்றத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடை முறையின் பிரகாரம் செயலாளர் பதவிக்காக நிரந்தர நியமனம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 4. கணக்களிபொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் (4) ஆம் பந்தியின் பிரகாரம் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டிய போதும் சபையினால் 2019 சனவரி முதல் ஏப்ரல் வரையான 04 மாதங்களில் செயற்படுத்த எதிர்பார்க்கப்பட்ட 3 செயற்பாடுகளுக்காக மாத்திரம் செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்தது | வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரதியொன்றை கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு நடப்பாண்டில் நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். |

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் சொத்துக்கள் ரூபா 7.9 மில்லியன் வருமானம் ரூபா 14.4 மில்லியன் மற்றும் செலவினம் ரூபா 12.4 மில்லியன் காணப்பட்ட போதும் சபையின் கொடுக்கல் வாங்கல்கள் உள்ளகக் கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. | உள்ளக கணக்காய்வு பிரிவொன்றை ஸ்தாபிப்பதற்கு தேவையான பதவியணியினர் எமது நிறுவனத்தில் இல்லாதிருந்தமையால் வரிசை அமைச்சு ஊடாக உள்ளகக் கணக்காய்வொன்று மேற் கொள்ளுமாறு கோரி அமைச்சின் செயலாளருக்கு இதற்கு முன்னர் கடிதம் வழங்கப்பட்டிருந்தது. | சபையின் கொடுக்கல் வாங்கல்கள் உள்ளகக் கணக்காய்விற்கு உட்படுத்தப்பட வேண்டும். |